# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர் , கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : 3937/ 2011 / எம்சி. 8 நாள் : 06.06 .2011

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற 13.06.2011 திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/உண்மை நகல் /

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

# மாமன்ற சாதாரணக் கூட்டம் - ஜுன் 2011
## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| வ. எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1 | Jnnurm – பில்லூர் II-வது குடிநீர் திட்டம் - வனத்துறை இடம் - மலைவாழ் மக்களுக்கு இழப்பீட்டுத் தொகை மற்றும் பணி வழங்குதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 2 | பொறியியல் பிரிவு - தெருவிளக்குகள் பராமரித்தல் - புதிய ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 3 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 13 – GM நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 4 | பொது சுகாதாரம் - குடும்ப நல அறுவை சிகிச்சை மையங்கள் - வாடகை அடிப்படையில் மயக்கவியல் மருத்துவர்கள் கட்டணம் நிர்ணயித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 5 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 31 – சீனிவாசபுரம் லஜபதிராய் சாலை – புதிய வணிக வளாக கடை – மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 6 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் -வணிக வளாக கடைகள் - உரிமம் புதுப்பித்து வாடகை உயர்வு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 7 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 29 - இளங்கோ நகர் - புதிய சமுதாயக்கூடம் - வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 8 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - சத்தி ரோடு நவீன பொது கட்டண கழிப்பிடம் - 2011-12 இரண்டாம் ஆண்டிற்கு உரிமம் வழங்கப்பட்டது – குத்தகை செலுத்தாதது – வைப்புத்தொகை பறிமுதல் செய்தல் - மின்ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 9 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - ஆர்.வி. ஹோட்டல் அருகில் உள்ள கட்டண கழிப்பிடம் - உரிமம் ரத்து செய்து மறு ஏலம் நடத்துதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 10 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - குத்தகை இனங்கள் - 2011-12 ம் ஆண்டு உரிமத்தொகை செலுத்தாத இனங்கள் - உரிமம் ரத்து செய்து மறு ஏலம் நடத்துதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 11 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - ஆரோக்கிய சாமி ரோடு கடைகள் 5,6 மற்றும் மேட்டுப்பாளையம் ரோடு மொத்த காய்கறி மார்க்கெட் கடை எண் 60 – உரிமம் பெயர் மாற்றம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 12 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - டி.பி. ரோடு வணிக வளாக கடை எண் 2 மற்றும் பன்னீர் செல்வம் பூ மார்க்கெட் கடை எண் 1 – உரிமம் பெயர் மாற்றம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 13 | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - நஞ்சுண்டாபுரம் ரோடு வணிக வளாக கடை எண் 1 மற்றும் 2 – உரிமம் ரத்து செய்து மறு ஏலம் கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 14 | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - சிங்காநல்லூர் பேருந்து நிலையம் - கட்டண கழிப்பிடம் - ஒப்படை செய்யப்பட்டது – ரத்து செய்தல் - ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 15 | பொறியியல் பிரிவு - 2 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 16 | பணியமைப்பு - திருமதி எம்.கே. ஜெயஸ்ரீ, உதவி ஆணையாளர் (கணக்குகள்) – பதவி நீடிப்பு வழங்குதல் - அரசுக்கு பரிந்துரை செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 17 | பணியமைப்பு - கணக்கு அலுவலர் மற்றும் நிர்வாக அலுவலர் பதவி- தேர்ந்த பெயர் பட்டியல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 18 | மாமன்றப் பிரிவு - அகில இந்திய மேயர் மன்றம், புது டெல்லி – ஆண்டு சந்தா செலுத்துவது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 19 | நகரமைப்புப் பிரிவு - அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டும் கட்டிடங்கள் முறைப்படுத்துதல் - ஆணையரின் உத்திரவு - ரத்து செய்தல் - தொடர்பாக. |

நன்றியுரை

**பொருள் எண் 1**

கோவை மாநகராட்சி தனி குடிநீர் திட்டமான பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 113.74 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருவதில், பில்லூர் அணைக்கட்டிலிருந்து பெரியகொம்பை குகை நுழைவு வாயில் வரை குடிநீர் கொண்டு செல்லும் சிப்பப் பணியில் பில்லூர் அணைப்பகுதியின் கரை ஓரத்தில், புதியதாக நீர் சேகரிப்பு கிணறு, நீரேற்று அறை மற்றும் 1500 மிமீ விட்டமுள்ள நீரேற்று பிரதான குழாய் 327 மீட்டர் நீளத்திற்கு அமைக்கும் பணிக்காக, பில்லூர் அணைப்பகுதிக்கு உட்பட்ட மேட்டுப்பாளையம் வட்டம், கோபினாரி, பாதுகாக்கப்பட்ட வனகாடுகள் பகுதியில் 1.83 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலம் வனத்துறையினரிடமிருந்து அரசாணை எண். 88, சுற்றுப்புற சூழல் மற்றும் வனத்துறை நாள். 30.06.2010—ன் படி மாநகராட்சியால் பெறப்பட்டது. வனத்துறைக்கு சொந்தமான 1.83 ஹெக்டேர் நிலத்தில் கீழ்குறிப்பிட்ட 11 மலைவாழ் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் விவசாயம் செய்து வருவதாக கடந்த 24.07.2008—ல் வனத்துறையினரால் தெரிவிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | குமார், த/பெ. ரங்கசாமி | நெல்லிமரத்தூர், பில்லூர் டேம் அருகில்,<br>மேட்டுப்பாளையம் வட்டம்,<br>கோயம்புத்தூர் மாவட்டம். |
| 2. | முருகன், த/பெ. ரங்கசாமி | “ |
| 3. | ரங்கன், த/பெ. மருதன் | “ |
| 4. | வடுகன், த/பெ. நஞ்சன் | “ |
| 5. | ரங்கன், த/பெ. மணியன் | “ |
| 6. | லட்சுமணன், த/பெ. மணியன் | “ |
| 7. | பழனிச்சாமி, த/பெ. லட்சுமணன் | “ |
| 8. | நஞ்சன், த/பெ. ரங்கசாமி | “ |
| 9. | ஆறுமுகம், த/பெ. காடன் | “ |
| 10. | சுப்ரமணியன், த/பெ. ரங்கசாமி | “ |
| 11. | ரங்கசாமி, த/பெ. கக்கி | “ |

மேலும் வனத்துறையால் நிர்ணயிக்கப்படும் கீழ்க்கண்ட நிபந்தனைகள் மற்றும் வழிமுறைகளுக்கு ஒப்புக் கொண்டும் மேற்படி நிலத்தினை அதற்கான கிரயத் தொகை செலுத்தி பெறவும் மாமன்றம் தனது தீர்மானம் எண் 33, நாள் 22.06.2009—ல் ஒப்புதல் வழங்கியது.

I) அ) வனத்துறையின் 1.83 ஹெக்டேர் நிலத்தில் வசிக்கும் மலைவாழ் மக்களால் செய்யப்படும் விவசாய பணி பாதிப்பு ஏற்படுவதால் ஏற்படும் இழப்புத் தொகையினை கணக்கிட்டு மேற்படி பாதிக்கப்படும் 11 குடும்பங்களுக்கு சமமாக பிரித்துத் தர வேண்டும்.

ஆ) 11 மலைவாழ் மக்கள் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகள் மாநகராட்சியால் மின்சார வசதி, சாலை வசதி மற்றும் குடிநீர் வசதி செய்து தரப்பட வேண்டும்.

இ) 11 மலைவாழ் குடும்பத்தினருக்கும் குடும்ப தலைவர் குறிப்பிடும் ஒரு நபருக்கு அவரின் கல்வித் தகுதிக்கேற்ப, மாநகராட்சியில் உள்ள பணியிடங்களில் நிரந்தர வேலை வாய்ப்புத் தரவேண்டும்.

II) மாநகராட்சியின் பில்லூர் II குடிநீர் திட்டத்திற்கு தேவைப்படும் வனத்துறையின் **1.83** ஹெக்டேர் நிலத்திற்கு இரு மடங்கு பரப்பளவுள்ள மாற்று நிலமான (Compensatory Afforestation land) **3.66** ஹெக்டேர் நிலத்தை வனத்துறை பரிவர்த்தனை மூலம் எடுத்துக்கொள்ள சம்மதிக்கும் நிலமாக மாவட்ட நிர்வாகத்தின் மூலமாக வழங்கியும், வனத்துறையால் மேற்படி நிலத்தினை வனத்துறையின் காடுகள் வளர்க்கும் திட்டத்திற்குண்டான தொகையினையும் மாநகராட்சி செலுத்த வேண்டும். எனவே மாவட்ட நிர்வாகத்தின்மூலம் மாற்று நிலம் கண்டறியப்பட்டு உரிய பிரேரனைகள் அரசிற்கு அனுப்பப்பட்டு அவர்களுக்கு அனுப்பப்பட்டு அரசாணை எண் **136**, வருவாய்துறை (நி.மு–4(1), நாள் **18.03.2010**–ல் வனத்துறைக்கு வருவாய் துறையின் நிலமானதும் தென்கரை கிராமம் சர்வே எண் **499**–ல் **3.66** ஹெக்டேர் நிலத்தினை வனத்துறைக்கு பரிவர்த்தனை செய்து ஒப்படைப்பு செய்யவும், அதற்குண்டான அரசு நிர்ணயம் செய்த நில மதிப்பு தொகையான ரூ. **10,11,990/–** (ரூபாய் பத்து இலட்சத்து பதினோராயிரத்து தொள்ளாயிரத்து தொன்னூறு மட்டும்) –ஐ மாநகராட்சி கடந்த **18.01.2010**– ல் செலுத்தியது. அதுதவிர வனத்துறையின் நிலமான **1.83** பரப்பளவுள்ள நிலத்திற்கு வருவாய் துறையின் மதிப்பீட்டின்படி வனத்துறைக்கு மாநகராட்சி ஒரு ஹெக்டேருக்கு ரூ. **8.03** லட்சம் வீதம் **1.83** ஹெக்டேர் நிலத்திற்கு ரூ. **14,70,000/–** மற்றும் வனத்துறைக்கு பரிவர்த்தனை செய்து தரும் வருவாய்த்துறை நிலமான **3.66** ஹெக்டேர் நிலத்தில் வனத்துறையால் காடுகள் வளர்க்கும் திட்டத்திற்கென (Compensatory Afforestation cost) தொகையாக ரூ. **8,00,000/–** சேர்த்து மொத்தம் ரூ. **22,70,000/–** (ரூபாய் இருபத்திரெண்டு இலட்சத்து எழுபது ஆயிரம் மட்டும்) என மாவட்ட வன அலுவலர் அவர்களது ந.க.எண்: வ1/2052/2008, நாள் **27.01.2010**–ல் தெரிவித்ததின்பேரில் மாநகராட்சி கடந்த **28.01.2010**–ல் மேற்படி தொகையினை செலுத்தியது. இருப்பினும் சுற்றுப்பற சூழல் மற்றும் வனத்துறை (FR10) அரசாணை எண் **88** நாள் : **30.06.2010** மற்றும் மத்திய அரசின் சுற்றுப்புற சூழல் மற்றும் வனத்துறை கடித எண் 4/TNB549/2008–BAN/7308 நாள் : **05.06.2010** – ன் படி சட்ட ரீதியான வனத்துறை நில பயன்பாடு மாறக் கூடாது என்ற அடைப்படையில் **20** வருட கால குத்தகைக்கு கோவை மாநகர குடிநீர் அபிவிருத்தி பணிக்கென ஒப்படைப்பு செய்ய உத்தரவு பெறப்பட்டது.

வனத்துறை நிலத்தில் இதுநாள் வரையில் விவசாயம் செய்து வந்த மலைவாழ் மக்களின் விவசாயம் பாதிக்கப்படுவதால் மழைவாழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகையும் வருவாய் துறையினரால் கணக்கிடப்பட்டு தெரிவிக்கப்பட்ட ரூ. **3,16,596/–**ஐ மலைவாழ் பழங்குடி மக்களுக்கு வழங்க மாவட்ட வன அலுவலர் தனது கடித எண். வ1/2052/2008, கடந்த **02.07.2010**–ல் தெரிவித்து இருந்தார். இந்நிலையில் கோபினாரி வட்டம், வனப்பகுதி மலைவாழ் பழங்குடி மக்கள் மற்றும் கெம்மாரம்பாளையம் ஊராட்சி மன்றத் தலைமையில் கடந்த **15.08.2010**–ம் தேதியன்று நடத்தப்பட்ட கிராம சபா கூட்டத்தில் ஏற்கனவே **11** எண்ணிக்கையிலான மலைவாழ் குடும்பங்கள் விவசாயப்பணி செய்து வந்ததாக தவறுதலாக கூறப்பட்டுள்ளதாகவும், உண்மையில் **12** எண்ணிக்கையிலான மலைவாழ் குடும்பங்கள் மேற்படி நிலத்தில் விவசாயப்பணி செய்து வந்ததாக தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றி (தீர்மானம் எண்:15, நாள் **15.08.2010**) மேற்குறிப்பிட்டுள்ள இழப்பீட்டுத் தொகையினை கீழ்குறிப்பிட்டுள்ள **12** எண்ணிக்கையிலான மலைவாழ் குடும்பங்களுக்கு முறையே ரூ. **26,383/–** வீதம் பிரித்துத் தருமாறு தெரிவித்ததின்பேரில், வனத்துறையினரால் சரிபார்க்கப்பட்டு மாவட்ட வன அலுவலர் தனது ந.க.எண். வ1/2052/2008, நாள் **16.03.2011**–ல் கிராமசபா கூட்ட நகலினை இணைத்து அதன்படி மேற்படி நில இழப்பீட்டு தொகையினை சமமாக ஒவ்வொருவருக்கும் ரூ. **26,383/–** வீதம் **12** எண்ணிக்கையிலான மலைவாழ் மக்களுக்கு வழங்குவதற்கும், மேலும் அம்மலைவாழ் குடும்பங்களில் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை என்ற அடிப்படையில் புனர் நிர்மான வாழ்வாதார வழிவகையின் அடிப்படையில் (Rehabitation) சம்பந்தப்பட்ட மழைவாழ் குடும்ப தலைவருக்கோ (அல்லது) அவரால் குறிப்பிடப்படும் அவரின் வாரிசுதாரரின் கல்வித் தகுதிக்கேற்ப மாநகராட்சியில் பணியமர்த்த உரிய அனுமதியினை அரசிடமிருந்து பெற்று வழங்கவும் பரிந்துரை செய்துள்ளார்.

| வ. எண் | மலைவாழ் குடும்பத் தலைவர் விபரம் | மாநகராட்சியின் பணிக்கு தேர்வு செய்து தெரிவித்துள்ள நபர்கள் விபரம் | வாரிசு /உறவு முறை | அடிப்படை கல்வித் தகுதி | தற்போது பயின்று வரும் மேற்படிப்பிற்கான கல்வித் தகுதி |
|---|---|---|---|---|---|
| 1. | குமரன், த/பெ. ரங்கசாமி | K. ரங்கசாமி | மகன் | 10–ம் வகுப்பு | B.com இரண்டாம் ஆண்டு |
| 2. | R. முருகன், த/பெ. ரங்கசாமி | R. முருகன் | –– | 4–ம் வகுப்பு தேர்ச்சி | |
| 3. | M. ரங்கன், த/பெ. மருதன் | M.ரங்கன் | –– | 3–ம் வகுப்பு | |
| 4. | N. வடுகன், த/பெ. நஞ்சன் | V.முருகன் | மகன் | 10–ம் வகுப்பு | Diploma in Instrumentation & Control Engg. |
| 5. | M. ரங்கன், த/பெ. மணியன் | சாமிநாதன் | மகன் | 10–ம் வகுப்பு | DEEE மூன்றாம் ஆண்டு |
| 6. | M. லட்சுமணன், த/பெ. மணியன் | பழனிசாமி | மகன் | 10–ம் வகுப்பு | B.com இரண்டாம் ஆண்டு |
| 7. | R.நஞ்சன், த/பெ. ரங்கசாமி | நஞ்சன் | –– | 5–ம் வகுப்பு | |
| 8. | K. லட்சுமணன், த/பெ. கக்கி | லட்சுமணன் | –– | 8–ம் வகுப்பு தேர்ச்சி பெறவில்லை | |
| 9. | வெங்கடேஷ், த/பெ. கிருஷ்ணசாமி | வெங்கடேஷ் | –– | 2–ம் வகுப்பு | |
| 10. | சுப்ரமணி, த/பெ. ரங்கசாமி | ராஜேந்திரன் | மகன் | 7–ம் வகுப்பு தேர்ச்சி | |
| 11. | K. ரங்கசாமி, த/பெ. கக்கி | R. சந்திரன் | மகன் | 10–ம் வகுப்பு | ITI இரண்டாம் ஆண்டு |
| 12. | ஆறுமுகம், த/பெ. காடன் | ஆறுமுகம் | –– | 2–ம் வகுப்பு | |

மேற்படி 12 எண்ணிக்கையிலான மலைவாழ் மக்களின் புனர் நிர்மான வாழ்வாதார வழிவகையின் அடிப்படையில் குடும்பத் தலைவரின் கல்வித் தகுதிக்கு ஏற்பவும் அல்லது குடும்ப தலைவரால் சுட்டி குறிப்பிடப்பட்டுள்ள வாரிசுதாரர்களின் கல்வித்தகுதிக்கேற்ப மாநகராட்சியால் மாநகரரட்சி குடிநீர் திட்டப்பணியில் தோற்றுவிக்கப்படவுள்ள அல்லது மாநகராட்சியில் காலியாகவுள்ள பணியிடங்களில் பணியமர்த்த அரசுக்கு உரிய முன்மொழிவுகளை அனுப்பிவைத்து அரசின் அனுமதி பெற்று பணியமர்த்த மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

அ. பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டத்திற்கு வனத்துறையின் 1.83 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலத்தினை பெறுவதற்கு மாநகராட்சியின் மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கையினை மாமன்றம் பதிவு செய்யலாம்.

ஆ. வனத்துறையிடமிருந்து பெறப்பட்ட 1.83 ஹெக்டேர் நிலத்தில் விவசாயம் செய்து வந்த மலைவாழ் மக்களின் விவசாயப்பணி பாதிக்கப்பட்டதால் அவர்களுக்கான இழப்பீட்டுத் தொகையான ரூ. 3,16,596/–ஐ மேற்படி 12 மழைவாழ் மக்களின் குடும்பங்களுக்கு சமமாக பிரித்து ரூ. 26,383/– வீதம் வழங்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

இ. மலைவாழ் மக்களின் புனர் நிர்மான வாழ்வாதார அடிப்படையில் குடும்பத் தலைவர் அல்லது குடும்பத் தலைவர் அவர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள மேற்படியாரின் வாரிசுதாரருக்கு அவர்களது கல்வித் தகுதிக்கேற்ப மாநகராட்சியில் காலியாகவுள்ள அல்லது தோற்றுவிக்கப்படவுள்ள குடிநீர் திட்ட பணியிடங்களில் பணியமர்த்த உரிய அனுமதியினை அரசிடமிருந்து பெற நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 9190/02/JN5

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 1 நாள் 13.06.2011</u>

அலுவலகக் குறிப்பு ‘அ’ ‘ ஆ’ ‘இ’ ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

கோயம்புத்தூர் மாநகராட்சி, நான்கு மண்டலங்களிலும் உள்ள தெருவிளக்குகளை பராமரிக்கும் பணியை தி/ள் சால்ஜர் நிறுவனத்தாரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி நிறுவனத்தாரின் ஒப்பந்தகாலம் செப்டம்பர் மாதத்துடன் முடிவடையவுள்ளதால் மேற்படி பராமரிப்பு பணிக்கு புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்ய வேண்டியுள்ளது.

தற்போது நான்கு மண்டலங்களிலும் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ளபடி இனம் வாரியாக தெருவிளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

| Light Details | 40W FTL | 70W SVL | 250 W SVL | 400W SVL | 250W MHL | 400W MHL | 2x24W T5 | 5x24W T5 | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| East Zone | 694 | 7174 | 3117 | 32 | 0 | 144 | 101 | 34 | 11296 |
| South Zone | 228 | 2972 | 2963 | 0 | 305 | 148 | 255 | 64 | 6935 |
| North Zone | 954 | 7033 | 3660 | 64 | 0 | 106 | 0 | 0 | 11817 |
| West Zone | 104 | 3721 | 2834 | 0 | 2 | 136 | 188 | 96 | 7081 |
| **Total** | **1980** | **13881** | **12574** | **96** | **307** | **911** | **277** | **191** | **37129** |

மேற்படி தெருவிளக்குகளை பராமரிப்பு செய்ய ஆண்டொன்றிக்கு உத்தேச செலவு ரூ.2,81,32,000/- ஆகும். எனவே, மேற்படி பணிக்கு மண்டலம் வாரியாக தனித்தனியே ஒப்பந்தப்புள்ளி கோரவும் இத்திட்டத்தை மூன்றாண்டுகளுக்கு செயல்படுத்த அனுமதியும் ஆகும் செலவினத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்** **ந.க.எண். 4008 /2011 / எம்.டி.4**

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 2 நாள் 13.06.2011</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. மேலும் நிபந்தனைகளை பணிகள் குழுவில் வைத்து முடிவு செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 3

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம், வார்டு எண் 13-க்குட்பட்ட GM நகர் பகுதியில் மழைநீர் வடிகால் வசதிகள் இல்லாததால் மழைக்காலங்களில் மழைநீர் வீடுகளில் புகுந்து விடுகிறது. மேலும் சாலைகளில் நீர் தேங்கி சுகாதாரக்கேடு ஏற்படுகிறது. இவற்றைத் தடுக்க GM நகர் மேற்கு பகுதியில் மழைநீர் வடிகால் வசதிகள் செய்யவேண்டும். எனவே புதியதாக மழைநீர் வடிகால் கட்டுவதற்கு ரூ. 69,50,000/- மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 10029/10MD4

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 3 நாள் 13.06.2011</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 4

பொருள் - பொது சுகாதாரம் - கோயம்புத்தூா் மாநகராட்சி – குடும்ப நல அறுவை சிகிச்சை மையங்கள் - வாடகை அடிப்படையில் மயக்கவியல் மருத்துவா்கள் கட்டணம் - வழங்குதல் - தொடா்பாக.

-------------

கோயம்புத்தூா் மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள 6 அறுவை சிகிச்சை நகா்நல மையங்களில் குடும்ப நல பெண் அறுவை சிகிச்சைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வகை அறுவை சிகிச்சையின்போது பயனாளிகளுக்கு வாடகை அடிப்படையில் மயக்க சிகிச்சை வழங்க அரசிடமிருந்து குறைந்தது 3 அறுவை சிகிச்சைகள் ஒரே நேரத்தில் செய்தால் மட்டும் மயக்க மருத்துவா்களுக்காக ரூ. 1,100/- வழங்கப்பட்டு வருகின்றது. இதற்காக 3 தாய்மாா்கள் தயாராகும்வரை பிற தாய்மாா்கள் காக்க நேரிடுகிறது. இதனால் பெரும்பாலான தாய்மாா்கள் பிரசவித்தவுடன் வீட்டுக்குச் சென்று விடுகின்றாா்கள். இதனால் தேசிய திட்டமான குடும்பநல அறுவை சிகிச்சைகள் செயல்படுத்துவதில் தொய்வு ஏற்படுகிறது.

எனவே அனைத்து அறுவை சிகிச்சை மையங்களிலும் அன்றாடம் பிரசவம் ஆகும் ஒரு தாய் மட்டும் விருப்பம் தெரிவித்தாலும் அவருக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளவும், இதற்காக மாநகராட்சி நிதியிலிருந்து வாடகை அடிப்படையில் பணிபுரியும் மயக்கவியல் நிபுணருக்கு ஒரு அறுவை சிகிச்சைக்கு நாள் ஒன்றிற்கு தலா ரூ. 500/- வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - மாநகராட்சியில் செயல்படும் 6 குடும்ப நல அறுவை சிகிச்சை மையங்களில் ஒரு நாளில் ஒரு அறுவை சிகிச்சை நடைபெற்றாலும் தலா ரூ. 500/- வீதம் வாடகை அடிப்படையில் பணிபுரியும் மயக்கவியல் மருத்துவா்களுக்கான தொகை மாநகராட்சி நிதியிலிருந்து வழங்கலாம்.

ந.க.எண். 2457/2005/எம்.இ. 5

<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 4 நாள் 13.06.2011</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 5

பொருள் : கோயம்புத்தூா் மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வாா்டு எண். 31 – சீனிவாசபுரம் லஜபதிராய் சாலையில் புதியதாக வணிகவளாக கடை கட்டியது – மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்வது – தொடா்பாக.

-----------------

கோயம்புத்தூா் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வாா்டு எண் 31-ல் சீனிவாசபுரம் லஜபதிராய் சாலையில் புதியதாக வணிகவளாக கடை (3.15மீ x 3.45மீ)or 117.சதுரடி அளவுகள் கொண்ட கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட கடையினை மின் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளிகள் மூலம் ஒதுக்கீடு செய்யவும், உதவி பொறியாளா் குறிப்பின் படி பொதுப்பணித்துறை வழிகாட்டுதல் மதிப்பில் கடைக்கு மாத வாடகை ரூ.3,100/- என நிா்ணயக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கடையினை மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்யவும் கீழ்கண்டவாறு காப்புத் தொகை, வைப்புத்தொகை,சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் மற்றும் சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லாமல் அதற்கு செலுத்த வேண்டிய தொகை நிா்ணயம் செய்யவும் அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டத்தில் 31.05.2011-ம் தேதிய தீா்மான எண்.7ல் ஒப்புதல் அளித்து தீா்மானித்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு பொருள் ஒப்புதலுக்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| வைப்புத்தொகை | - ரூ. 25,000/, |
| காப்புத்தொகை | - ரூ. 25,000/- |
| சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் | - ரூ1,50,000/- |
| சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லாமல் அதற்கு செலுத்த வேண்டிய தொகை | - ரூ.50,000/ - |

அலுவலகக் குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: 04798/2011/அ8(வ)

<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 5 நாள் 13.06.2011</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மானம் எண். 7 நாள் 31.05.2011 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 6

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் வணிக வளாக கடைகளுக்கு உரிமம் புதுப்பித்து வாடகை உயர்வு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டுவது – தொடர்பாக.

பார்வை : அரசாணை (நிலை) எண்.92 நாள்.03.07.2007.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வணிக வளாக கடைகளின் மூன்றாண்டு உரிம காலம் முடிவடைகிறது. மேற்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீடித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை இருபதாண்டுகள்) எண்.147-க்கு இணங்க மாமன்ற தீர்மான எண்.164 நாள் 28.10.2004-ன் படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. கடைகளின் உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.92 – நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.07 – ன்படி புதுப்பித்து 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்ய உரிம கட்டணம் அடங்கிய பட்டியல் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

**இடம் - பட்டேல் ரோடு**

| வ. எண் | கடை எண் | பெயர் | உரிமம் காலம் முடியும் நாள் | உரிமம் புதிப்பிக்கப் பட வேண்டிய நாள் | மாத வாடகை ரூபாய் | அரசு ஆணை எண்92 ந,நி மற்றும் கு.வ.துறை நாள் 3.7.07-ன் படி 15% உயர்வு செய்த மாத வாடகை ரூபாய் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | பாபு. | 30.04.2011 | 01.05.2011 | 2600 | 2990 |
| 2 | 25 | M.S.திருமலைசாமி | 31.03.2011 | 01.04.2011 | 2466 | 2836 |
| 3 | 27 | C.சரோஜினி | 31.03.2011 | 01.04.2011 | 2466 | 2836 |
| 4 | 28 | தமிழ்நாடு நுகர்பொருள் அங்காடி | 07.07.2011 | 08.07.2011 | 3390 | 3899 |

**இடம் - டாடாபாத் ராஜீ ரோடு**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | 2 | சாமிக்கண்ணு | 31.03.2011 | 01.04.2011 | 2533 | 2913 |
| 6 | 1 | M.K.மீரான் | 31.03.2011 | 01.04.2011 | 2533 | 2913 |
| 7 | 3 | M.K.மீரான் | 31.03.2011 | 01.04.2011 | 2533 | 2913 |
| 8 | 4 | M.K.மீரான் | 31.03.2011 | 01.04.2011 | 2533 | 2913 |
| 9 | 5 | M.K.மீரான் | 31.03.2011 | 01.04.2011 | 2533 | 2913 |
| 10 | 6 | M.K.மீரான் | 31.03.2011 | 01.04.2011 | 2533 | 2913 |
| 11 | 7 | M.K.மீரான் | 31.03.2011 | 01.04.2011 | 2533 | 2913 |
| 12 | 8 | M.K.மீரான் | 31.03.2011 | 01.04.2011 | 2533 | 2913 |
| 13 | 9 | M.K.மீரான் | 31.03.2011 | 01.04.2011 | 2533 | 2913 |

**இடம் - நியூ டாடாபாத் ராஜீ ரோடு**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 14 | 2 | ஆவின் நிறுவனம் | 31.08.2011 | 01.09.2011 | 3000 | 3450 |
| 15 | 5 | வீட்டு வசதி நகா்புற வளா்ச்சி கழகம் | 27.05.2011 | 28.05.2011 | 1760 | 2024 |
| 16 | 6 | வீட்டு வசதி நகா்புற வளா்ச்சி கழகம் | 27.05.2011 | 28.05.2011 | 1760 | 2024 |
| 17 | 7 | வீட்டு வசதி நகா்புற வளா்ச்சி கழகம் | 27.05.2011 | 28.05.2011 | 1760 | 2024 |
| 18 | 8 | வீட்டு வசதி நகா்புற வளா்ச்சி கழகம் | 27.05.2011 | 28.05.2011 | 1760 | 2024 |
| 19 | 9 | வீட்டு வசதி நகா்புற வளா்ச்சி கழகம் | 27.05.2011 | 28.05.2011 | 1760 | 2024 |

**இடம் - பழைய டாடாபாத்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 20 | 2 | விஜயகுமாா் | 31.03.2011 | 01.04.2011 | 1398 | 1608 |
| 21 | 3 | சி.காளியப்பன் | 31.03.2011 | 01.04.2011 | 1398 | 1608 |
| 22 | 4 | மோகன்குமாா் | 31.03.2011 | 01.04.2011 | 1398 | 1608 |
| 23 | 5 | தாமோதரன் | 31.03.2011 | 01.04.2011 | 1398 | 1608 |
| 24 | 6 | S.மணி | 31.03.2011 | 01.04.2011 | 1398 | 1608 |

**இடம் - சத்தி ரோடு ஆம்னி பேருந்து கட்டண பதிவறைகள்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 25 | A16 | ஜீ.ஜீ.கேப்ஸ் | 09.06.2011 | 10.07.2011 | 3350 | 3853 |
| 26 | A17 | D.ரமேஷ்குமாா் | 09.06.2011 | 10.07.2011 | 3700 | 4255 |
| 27 | A18 | K.ராஜீ | 09.06.2011 | 10.07.2011 | 4155 | 4779 |
| 28 | A19 | K.ராஜீ | 09.06.2011 | 10.07.2011 | 3855 | 4434 |
| 29 | A20 | A.புருஷோத்தமன் | 09.06.2011 | 10.07.2011 | 4100 | 4715 |
| 30 | A21 | G.V.ஆனந்தமாா் | 09.06.2011 | 10.07.2011 | 3400 | 3910 |

**இடம் -ஆம்னி பேருந்து நிலையம் - ராதாகிருஷ்ணா ரோடு வணிக வளாக கடைகள்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 31 | 1 | R.ஜெயந்தி | 31.03.2011 | 01.04.2011 | 2700 | 3105 |
| 32 | 2 | டி.ராகவலிங்கம் | 31.03.2011 | 01.04.2011 | 3500 | 4025 |
| 33 | 3 | பி.எஸ். சங்கா் | 31.03.2011 | 01.04.2011 | 2800 | 3220 |
| 34 | 4 | முகமது ஷஜீப் | 31.03.2011 | 01.04.2011 | 2500 | 2875 |
| 35 | 5 | M.கிருஷ்ணன் | 30.06.2011 | 01.07.2011 | 7890 | 9074 |
| 36 | 6 | M.கிருஷ்ணன் | 30.06.2011 | 01.07.2011 | 7890 | 9074 |
| 37 | 9 | ஜி.விவேகானந்தன் | 31.08.2011 | 01.09.2011 | 10900 | 12535 |

**இடம் -ஆம்னி பேருந்து நிலையம் - ராதாகிருஷ்ணா ரோடு வணிக வளாக கடைகள் - முதல் தளம்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 38 | 1 | அரசு கேபிள் டி.வி. | 17.06.2011 | 18.06.2011 | 38500 | 44275 |

**இடம் - ராயப்பா நகா் - கணபதி**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 39 | 1 | B.S.N.L. | 07.02.2011 | 08.02.2011 | 22308 | 25654 |

மேற்படி கடைகளுக்கு அரசு ஆணையின்படி ஏற்கனவே உள்ள மாதவாடகையில் 15% வாடகை உயா்வு செய்து மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் புதுப்பித்து வழங்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 31.05.2011-ம் தேதிய தீா்மான எண்.5-ல் ஒப்புதல் அளித்து தீா்மானித்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: 011655/2010/B1(வ)

<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 6 நாள் 13.06.2011</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மானம் எண். 5 நாள் 31.05.2011 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 7

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வார்டு எண்.29ல் – இளங்கோ நகரில் புதியதாக சமுதாயக் கூடம் தரைதளத்தில் கட்டப்பட்டுளளது. பொதுமக்கள் உயோகப்படுத்தும் வகையில் வாடகைக்கு ஒதுக்கீடு செய்வது – தொடர்பாக.

-----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 29-ல் இளங்கோ நகரில் புதியதாக சமுதாயக் கூடம் தரைதளத்திலும் மற்றும் படிப்பகம் முதல் தளத்திலும் கட்டப்பட்டுள்ளது. தரைதளத்தில் உள்ள சமுதாய கூடத்தை விழா காலங்களில் பொதுமக்கள் உயோகத்திற்கு பயன்படுத்தும் வகையில் உதவி பொறியாளர் குறிப்பின் படி பொதுப்பணித்துறை வழிகாட்டுதல் மதிப்பில் நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.300/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் முதல்தளத்தில் உள்ள கட்டிடத்தை அப்பகுதி பொதுமக்கள் உபயோகத்திற்கு பயன்படுத்த குறிப்பு பெறப்பட்டுள்ளது.

அதன்படி, இளங்கோ நகரில் புதியதாக கட்டப்பட்டுள்ள தரைதளத்தில் அமைந்துள்ள சமுதாய கூடத்தை பொதுமக்கள் உபயோகத்திறகு பயன்படுத்த நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.300/- எனவும் அதற்கான வைப்புத்தொகை ரூ. 1,000/- எனவும் மற்றும் மத்திய மாநில அரசு துறைகளான வருமான வரித்துறை கலால்வரித் துறை மற்றும் இதர துறைகளால் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் உத்தரவுகளின் படி சேவை வரி மற்றும் இதர வரி கட்டணம் மற்றும் மின்சார செலவினங்கள் செலுத்த நிபந்தனைகளின்படி ஒதுக்கீடு செய்யவும், மற்றும் முதல் தளத்தின் கட்டப்பட்டுள்ள படிப்பகத்தை அப்பகுதி பொதுமக்கள் உபயோகத்திற்கு பயன்படுத்தவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 31.05.2011-ம் தேதிய தீர்மான எண்.8ல் ஒப்புதல் அளித்து தீர்மானித்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: 04797/2011/அ8(வ)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 7 நாள் 13.06.2011</u>

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள சமுதாயக் கூடத்தை பயன்படுத்தும் மக்கள் மிகவும் நலிவுற்ற பிரிவைச் சேர்ந்தவர்களாக இருப்பதனால் நாள் வாடகையாக ரூ. 200/- என நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 8

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்கு உட்பட்ட வருடாந்திர குத்தகை இனங்கள் 2011-12-ல் இரண்டாம் ஆண்டிற்கு உரிமம் புதுப்பிக்க கீழ்கண்ட இனத்திற்கு உரிமதாரர்களிடமிருந்து ரூ.20/- மதிப்புள்ள முத்திரைத் தாளில் 2010-11ம் ஆண்டின் குத்தகைத் தொகையில் 5% உயர்வு செய்து செலுத்த சம்மதம் தெரிவித்ததை தொடர்ந்து மாமன்றத்தில் மா.ம.தீ.எண்.220 நாள் 18.01.2011 ஒப்புதல் பெறப்பட்டது.

| வ. எண் | இனம் பெயர் | உரிமதாரர்பெயர் | 2010-11ம் ஆண்டு ஏலத்தொகை | 2011-12ம் ஆண்டிற்கு 5% உயர்வு செய்து செதுத்தவேண்டிய தொகை |
|---|---|---|---|---|
| 1 | சத்திரோடு, நவீன பொதுக் கட்டணம் கழிப்பிடம் | சு.மாதவன் | ரூ.4,82,000/- | ரூ.5,06,100/- |

குத்தகைதாரர் திரு.சு.மாதவன் தொகை செலுத்தும் நேரத்தில் (மார்ச் மாதத்தில்) அவர்களால் குத்தகை தொகை ரூ.5,06,100/- செலுத்த இயலாது எனவும் குத்தகை இனத்தை மாநகராட்சி வசம் ஒப்படை செய்ய முன்வந்தார். அக்கால கட்டத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருந்தால் ஏலம் நடத்த இயலாது என்பதனால் ஆனையாளர் அவர்களின் உத்திரவின்படி மூன்று மாத காலத்திற்கு ரூ.1,26,525/ - பெற்றுக்கொண்டு உரிமம் தொடர அனுமதிக்கப்பட்டது. திரு. சு.மாதவன் அவர்களின் சம்மத கடிதத்தின்படி இரண்டாம் ஆண்டிற்கு ஆன குத்தகை தொகை முழுவதையும் செலுத்த முன்வராததால் அவர் செலுத்திய வைப்பு தொகையினை பறிமுதல் செய்யவும், மேலும் 30ம் தேதி ஜுன் மாதம் 2011ல் உரிமம் முடிவடைவதால் சத்திரோடு நவீன கட்டண கழிப்பிடத்தை மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்யவும் அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டத்தில் 31.05.2011-ம் தேதிய தீர்மான எண்.6ல் ஒப்புதல் அளித்து தீர்மானித்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: 12974/2009/அ7(வ)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 8 நாள் 13.06.2011</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 6 நாள் 31.05.2011 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 9

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலத்திற்குட்பட்ட நகர பேருந்து நிலையம் ஆர்.வி.ஹோட்டல் அருகில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணத்தை காட்டிலும் கூடுதலாக கட்டணம் வசூல் செய்யப்பட்டதால் உரிமம் ரத்து செய்யப்படுவது தொடர்பாக.

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட நகர பேருந்து நிலையம் ஆர்.வி.ஹோட்டல் அருகில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணத்தை காட்டிலும் கூடுதலாக கட்டணம் வசூல் செய்யப்பட்டு வந்தது பொது மக்களின் புகார் மற்றும் உதவி வருவாய் அலுவலரின் நேரடி ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. மேற்படி செயலின் மூலம் ஏல நிபந்தனைகளை பின்பற்றாத காரணத்தால் குத்தகைதாரர் திரு.முனியாண்டி அவர்களுக்கு வழங்கப்பட்ட உரிமத்தை ரத்து செய்து மறு ஏலம் விடுவதற்கு வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் குழு தனது தீர்மான எண் .12 நாள். 31.05.2011 மூலம் அனுமதி அளித்துள்ளது. மேற்படி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் மீது மன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம். ந.க.எண். **9659 / 2009/** அ1

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 9 நாள் 13.06.2011</u>

முதலாவது முறையாக குத்தகைதாரர் திரு. முனியாண்டி, குத்தகை நிபந்தனைகளின்படி நடக்கத் தவறியதால் ரூ. 10,000/- அபராதம் விதிக்க ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 10

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட குத்தகை இனங்களில் 2010-2013ம் ஆண்டிற்கு ஏலம் விடப்பட்ட இனங்களில் 2011-2012ம் ஆண்டிற்கு செலுத்தப்பட வேண்டிய உரிமத்தொகையினை செலுத்தப்படாத காரணத்தால் கீழ்குறிப்பிட்டுள்ள உரிம இனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள, உரிமங்களை இரத்து செய்து பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் உரிமம் ஒப்படை செய்யப்பட வேண்டியுள்ளது.

| வரிசை எண் | இனம் | தற்போதைய நிலை |
|---|---|---|
| 1 | வ.உ.சி.பூங்கா சிறுவர் ரயில் | மூன்று மாதங்களுக்கு கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளது. |
| 2 | அவினாசி ரோடு பாஸ்போர்ட் அலுவலக இருச்கர வாகன வசூல் | துறை மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது |
| 3 | தர்மராஜா கோவில் வீதி நவீன கட்டண கழிப்பிடம் | மராமத்து பணிகள் நடைபெற்று தற்போது துறை மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. |
| 4 | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் தொலைக்காட்சி பெட்டி விளம்பர உரிமம் | மூன்று மாதங்களுக்கு கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளது. |

மேற்குறிப்பிட்டுள்ள இனங்களை பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒப்படை செய்வதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் குழு தனது தீர்மான எண்.149 நாள்.25.02.2011 மற்றும் தீர்மான எண். 2 நாள். 31.05.2011 மூலம் அனுமதி அளித்துள்ளது. மேற்படி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் மீது மன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம். ந.க.எண். **9659 / 2009 /** அ1

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 10 நாள் 13.06.2011</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 149 நாள் 25.02.2011 மற்றும் தீர்மானம் எண் 2 நாள் 31.05.2011 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 11

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – வணிக வளாக கடைகள் - ஆரோக்கிய சாமி ரோடு கடை எண்கள் 5,6 மற்றும் மேட்டுப்பாளையம் ரோடு மொத்த காய்கறி மார்க்கெட் கடை எண் 60 –ன் உரிமம் பெயர் மாற்றம் செய்ய அனுமதி கோருவது தொடர்பாக.

-------------

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட வணிகவளாக கடைகள் - ஆரோக்கியசாமி ரோடு கடை எண்கள் 5 ,6 மற்றும் மேட்டுப்பாளையம் மொத்த காய்கறி மார்கெட் கடை எண் 60 - ன் உரிமத்தினை பெயர் மாற்றம் செய்ய கோரி விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது.

1. திரு. கண்ணன் என்பவர் 02-02-20011 - ம் தேதிய விண்ணப்பத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான ஆரோக்கியசாமி ரோடு வணிக வளாக கடை எண் - 5 ஐ திரு. S.H.M. சர்மா என்பவருக்கு 1988 - ம் வருடம் மாநகராட்சி மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றும் இக்கடையில் திரு S.H.M. சர்மா உடன் சேர்ந்து கூட்டு வியாபாரம் ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆர்.வி அக்ரோ புட்ஸ் என்ற பெயரில் 1990 முதல் வியாபாரம் செய்து வந்ததாகவும் 2000-ம் வருடம் கூட்டு வியாபார ஒப்பந்தத்தில் இருந்து விலகியதற்கான ஒப்பந்த பத்திரத்தில் கையொப்பமிட்டுக் கொடுத்துள்ளார். மேலும் திரு. S.H.M. சர்மா பெயரிலிருந்து திரு. கண்ணன் பெயருக்கு பெயர் மாற்றம் செய்வதற்கு ரூ. 50/- மதிப்புள்ள முத்திரை தாளில் பிரமாணப் பத்திரமாக வழங்கியுள்ளார்.

2000 - ம் ஆண்டு முதல் கடையில் தான் மட்டும் வியாபராம் செய்து வருவதாகவும் மேற்படி கடைக்கான மாதாந்திர வாடகையை மாநகராட்சிக்கு நிலுவையின்றி April 2011 வரை செலுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். பெயர் மாற்றம் செய்வதற்கான 12 மாதத்திற்கு உண்டான வாடகை தொகை ரூ. 21,036/ - ம் (ரசீது எண் . 201104201973/20-04-11) , 12 மாதத்திற்கு வாடகைக்கு சமமான பெயர் மாற்ற கட்டணம் ரூ. 21,036/- ம் (ரசீது எண் 201104201973/20-04-11 விண்ணப்பக் கட்டணம் ரூ. 2500/ - ம் (ரசீது எண் . 201104201975/20-04-11) மொத்தம் ரூ.44572/-ஐ செலுத்தியுள்ளார். எனவே திரு. S.H.M. சர்மா பெயரிலிருந்து திரு.கண்ணன் பெயருக்கு உரிமம் பெயர் மாற்றம் செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

2. திரு.D. சுந்தரராஜன் என்பவர் 09-02-2011 - ம் தேதிய விண்ணப்பத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான ஆரோக்கியசாமி ரோடு வணிக வளாக கடை எண் 6 ஐ திருமதி. தனலட்சுமி என்பவருக்கு 1988 - ம் வருடம் மாநகராட்சி மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றும் இக்கடையில் திருமதி. தனலட்சுமி என்பவருடன் சேர்ந்து கூட்டு வியாபார ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1989 - முதல் வியாபாரம் செய்து வந்ததாகவும் 2002 - ம் வருடம் கூட்டு வியாபார ஒப்பந்தத்தில் இருந்து விலகியதற்கான ஒப்பந்தப் பத்திரத்தில் கையொப்பமிட்டு கொடுத்துள்ளார். மேலும் திருமதி. தனலட்சுமி பெயரிலிருந்து திரு. D. சுந்தரராஜன் பெயருக்கு பெயர் மாற்றம் செய்வதற்கு ரூ. 50/ - மதிப்புள்ள முத்திரைத்தாளில் பிராமணப் பத்திரமாக வழங்கியுள்ளார். 2002 - ம் ஆண்டு முதல் கடையில் தான் மட்டும் வியாபாரம் செய்து வருவதாவும் மேற்படி கடைக்கான மாதாந்திர வாடகையை மாநகராட்சிக்கு நிலுவையின்றி April 2011 வரை செலுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். பெயர் மாற்றம் செய்வதற்கான 12 மாதத்திற்கான உண்டான வாடகை தொகை ரூ. 24,024/- (ரசீது 2011042 01789/20-04-2011) 12 மாத வாடகைக்கு சமமான பெயர் மாற்ற கட்டணம் ரூ. 24,024/- (ரசீது 201104201789/ 20-04-2011) விண்ணப்பக்கட்டணம் ரூ. 2500/-(ரசீது 201104201792/ 20-04-2011) மொத்தம் ரூ. 50,548/- செலுத்தியுள்ளார். எனவே திருமதி. தனலட்சுமி பெயரிலிருந்து திரு. D. சுந்தரராஜன் பெயருக்கு உரிமம் பெயர் மாற்றம் செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

திரு. K. ஜமீஸ் அலி (J.S. Traders) என்பவர் 16.03.11 - ம் தேதிய விண்ணபத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான மேட்டுப்பாளையம் ரோடு வணிகவளாக மொத்த காய்கறி மார்கெட் கடை எண். 60- ஐ திரு. N. சாகுல் அமீது என்பவருக்கு 1998 - ம் வருடம் மாநகராட்சி மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றும் இக்கடையில் திரு. N. சாகுல் அமீது உடன் சேர்ந்து கூட்டு வியாபார ஒப்பந்தத்தின் அடிப்படையில் J.S. Traders என்ற பெயரில் 2001 முதல் வியாபாரம் செய்து வந்துள்ளதாகவும் 2002- ம் வருடம் கூட்டு வியாபார ஒப்பந்தத்தில் இருந்து விலகிக் கொண்டு அதற்கான ஒப்பந்த பத்திரத்தில் கையொப்பமிட்டுக் கொடுத்துள்ளார். மேலும் திரு. N. சாகுல் அமீது பெயரிலிருந்து திரு. K. ஜமீஸ் அலி (J.S. Traders) பெயருக்கு பெயர் மாற்றம் செய்வதற்கு ரூ. 50/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் பிராமணப்பத்திமாக வழங்கியுள்ளார்.

2002ம் ஆண்டு முதல் கடையில் தான் மட்டும் வியாபாரம் செய்து வருவதாகவும் மேற்படி கடையில் தான் மட்டும் வியாபாரம் செய்து வருவதாகவும் மேற்படி கடைக்கான மாதாந்திர வாடகையை மாநகராட்சிக்கு நிலுவையின்றி April 2011 வரை செலுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். பெயா் மாற்றம் செயவற்கு 12மாதத்திற்கு உண்டான உரிமம் கட்டவும் ரூ. 17,028/ - ம் ( ரசீது எண். 1970/20-04-2011 ) 12மாதத்திற்கு உண்டான பெயர் மாற்றக் கட்டணம் ரூ. 17,028/ - ம் (ரசீது எண். 201104201970/20-04-2011 ) விண்ணப்பக் கட்டணம் ரூ.2500/-ம் (ரசீது எண். 201104201970/20-04-2011) மொத்தம் ரூ. 36,556/-ஐ செலுத்தியுள்ளார். எனவே திரு.N.சாகுல் அமீது பெயரிலிருந்து திரு.K.ஜமீஸ் அலி (J.S. Traders) என்பவருக்கு உரிமம் பெயர் மாற்றம் செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே அரசு ஆணை எண் 92 -03-07-2007 ன் படி ஆரோக்கியசாமி ரோடு கடை எண். 5 - னை திரு. S.H.M. சா்மா பெயரில் இருந்து திரு. கண்ணன் பெயருக்கு பெயா் மாற்றம் செய்யவும், ஆரோக்கியசாமி ரோடு கடை எண் 6 - னை திருமதி. தனலட்சுமி பெயரில் இருந்து திரு. D. சுந்தரராஜன் பெயருக்கு பெயா் மாற்றம் செய்யவும் M.T.P. ரோடு மொத்த காய்கறி மாா்கெட் கடை எண் 60 - னை திரு. N. சாஹுல் அமீது பெயரில் இருந்து திரு. K. ஜமீஸ் அலி (J.S. Traders) பெயருக்கு பெயா் மாற்றம் செய்ய வரி விதிப்பு மற்றும் நிதிகுழுவின் தீா்மானம் எண் 10 நாள் 31.05.2011ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் -617 /11 /A1 (மே)

மாநகர மன்ற தீா்மானம் எண் 11 நாள் 13.06.2011

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மானம் எண். 10 நாள் 31.05.2011 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 12**

பொருள் : கோயம்புத்தூா் மாநகராட்சி – வணிக வளாக கடைகள் - D.B. ரோடு கடை எண் 2, மற்றும் பன்னீா் செல்வம் பூ மாா்கெட் கடைஎண் 1-க்கு உரிமம் பெயா் மாற்றம் செய்ய அனுமதி கோருவது தொடா்பாக

-------------

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட வணிக வளாக கடைகள் D.B. ரோடு கடை எண் 2, மற்றும் பன்னீா் செல்வம் பூ மாா்கெட் கடைஎண் 1-க்கு உரிமம் பெயா் மாற்றம் செய்ய கீழ் கண்டவாறு விண்ணப்பித்துள்ளாா்.

1) திரு D. சித்தாா்தன் என்பவா் 21-02-11 –ம் தேதிய விண்ணப்பத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான D.B. ரோடு கடை எண் 2-ஐ திரு. S. தாமோதரன் என்பவருக்கு 1992-ம் வருடம் மாநகராட்சி மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படியாா் 10-11-2001-ல் காலமாகிவிட்டாா். அவருடைய இறப்பு சான்றிதழ் மற்றும் வாாிசு சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது. இவருடைய வாாிசுதாரா் ஆகிய மகன் திரு. D.சித்தாா்த்தன் என்பவா் தன்னுடைய பெயரில் கடையின் உாிமத்தை அரசு ஆணை எண் 92-ன்படி தனது பெயருக்கு மாற்றித் தரக் கோாியுள்ளாா்.

திரு. S.தாமோதரரின் வாாிசுதாரா்கள் மனைவி D. புண்ணியவதி மகன் D. சீனிவாசன், D.சித்தாா்த்தன் ஆகிய மூவரில் D.சித்தாா்த்தன் பெயருக்கு மாற்றம் செய்ய ஆட்சேபனை சான்று ரூ. 50/- மதிப்புள்ள முத்திரைதாளில் பிரமாணப் பத்திாிகை அளித்துள்ளாா். மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய வாடகை தொகை நிலுவையின்றி April 2011- வரை செலுத்தியுள்ளாா், மற்றும் பெயா் மாற்றக் கட்டணமாக 12 மாத வாடகை தொகை ரூ.66,060/ - (ரசீது எண் 201104201888 / 20.04.11 ) 12 மாதத்திற்கு உண்டான பெயா் மாற்றக் கட்டணம் ரூ. 66,060/- ( ரசீது எண் 1888/ 20-04-11) விண்ணப்பக் கட்டணம் ரூ. 2500 /- ( ரசீது எண். 201104201891 / 20-04-11) மொத்தம் ரூ. 1,34,620/- செலுத்தியுள்ளாா்.

எனவே (லேட்) திரு. S. தாமோதரன் பெயரில் இருந்து D. சித்தாா்தன் பெயருக்கு உரிமம் பெயா் மாற்றம் செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

2) திரு.G.அலாவுதீன் என்பவா் 21-04-11 - ம் தேதிய விண்ணப்பத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான பன்னீா் செல்வம் பூ மாா்கெட் கடை எண் 1 ஐ திரு. N. குலாம் ரசூல் என்பவருக்கு 1990 -ல் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படியாா் 19-05-1997- ல் காலமாகிவிட்டாா். அவருடைய இறப்பு சான்றிதழும் வாாிசு சான்றிதழும் இணைக்கப்பட்டுள்ளது. இவருடைய வாாிசுதாரராகிய திரு. G. ஷேக் அலாவுதீன் என்பவா் தன்னுடைய பெயரில் கடை எண் 1 - ஐ அரசு ஆணை92-ன் படி தனது பெயருக்கு மாற்றித் தர கோாியுள்ளாா். எனவே, (லேட்)N. குலாம் ரசூல் 19-05-1997 - ல் காலமாகி விட்டதால் அவருடைய இறப்பு சான்றிதழும் வாாிசு சான்றிதழும் இணைக்கப்பட்டுள்ளது.

மேற்படி திரு. N. குலாம் ரசூல் வாாிசு தாரா்களாகிய மனைவி திரு. G. பாத்திமா பீவி , மகன்கள் திரு. G. சாஹுல் அமீது , திரு. G. அப்துல் சலாம் , திரு. G. சிராஜுதீன் , திரு . G. ஷேக் அமானுல்லா , திரு. G. சபருல்லா, திரு. G. ஷேக் அலாவுதீன் மகள்கள் திருமதி G. ரம்ஸா பேகம் , திருமதி. சாகிதா பேகம் , திருமதி. G. சம்சுதீஸா ஆகிய பத்து பேரில் திரு, G. ஷேக் அலாவுதீன் பெயருக்கு பெயா் மாற்றம் செய்ய ஆட்சேபனை சான்று ரூ.50/- மதிப்புள்ள முத்திரை தாளில் பிரமாணப் பத்திரிக்கை அளித்துள்ளனா். மற்றும் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய வாடகை தொகை நிலுவையின்றி April 2011 -வரை செலுத்தியுள்ளாா். பெயா் மாற்றக் கட்டணமாக 12 மாத வாடகை தொகை ரூ. 19,044/- ரசீது எண் (1373/ 27-04-11) 12 மாதத்திற்கு உண்டான பெயா் மாற்றக் கட்டணம் ரூ. 19,044/- ரசீது எண் (1373 / 27-04-11) விண்ணப்பக்கட்டணம் ரூ.2500/- ரசீது எண் (1382 /27-04-11) மொத்தம் ரூ. 40,588/- ம் செலுத்தியுள்ளாா். எனவே திரு. N. குலாம் ரசூல் பெயரில் இருந்து திரு. G. ஷேக் அலாவுதீன் பெயருக்கு உரிமம் பெயா் மாற்றம் செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே அரசு ஆணை எண் 92 3.7.2007-ன்படி D.B. ரோடு எடை எண். 2-னை திரு. S. தாமோதரன் பெயரில் இருந்து D.சித்தார்தன் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யவும் பன்னீா செல்வம் பூ மாா்கெட் கடை எண் 1 -னை திரு. N. குலாம் ரசூல் பெயரில் இருந்து திரு. G. ஷேக் அலாவுதீன் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 11 நாள் 31.05.2011ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.1630/11/A1 (மே)

மாநகர மன்ற தீர்மானம் எண் 12 நாள் 13.06.2011

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 11 நாள் 31.05.2011 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 13

பொருள் : வணிக வளாக கடைகள் - கோயமுத்தூா் மாநகராட்சி - கிழக்கு மண்டலம் - நஞ்சுண்டாபுரம் ரோடு மாநகராட்சி வணிக வளாகம் கடை எண். 1 மற்றும் 2 உரிமம் ரத்து செய்து மறு ஏலம் கோர அனுமதி கோருவது – தொடா்பாக

------

கோயமுத்தூா் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வாா்டு எண். 24 பகுதியில் அமைந்துள்ள நஞ்சுண்டாபுரம் ரோடு மாநகராட்சி வணிக வளாகம் கடை எண். 1 மாதாந்திர உரிம கட்டணம் ரூ.6,000/- என்ற அடிப்படையில் திரு கே. ஹரி என்பவருக்கும் கடை எண். 2 மாதாந்திர உரிம கட்டணம் ரூ.4,300/- என்ற அடிப்படையில் திரு வி.விஜய் மாதவன் என்பவருக்கு மாமன்ற தீா்மான எண். 10 நாள் 28.04.2008 வரை மூன்றாண்டுகளுக்கு 01.04.2008 முதல் 31.03.2011 வரை ஒப்படைப்பு செய்யப்பட்டது.

குத்தகை விதிகளின்படி குத்தகைதாரரிடமிருந்து மேற்படி கடைகளுக்கான வைப்புத் தொகை கீழ்குறிப்பிட்டுள்ளவாறு வசூல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| வைப்புத் தொகை<br>( கடை ஒன்றிற்கு ரூ. 25,000/- வீதம்) | - ரூ.50,000/- |
| ஓராண்டுக்கான உரிமக் கட்டணம் முன்வைப்புத் தொகை<br>( கடை எண். 1-க்கு ரூ. 6,000/- x 12) | - ரூ.72,000/- |
| ஓராண்டுக்கான உரிமக் கட்டணம் முன்வைப்புத் தொகை<br>( கடை எண். 2-க்கு ரூ. 4,300/- x 12) | - ரூ.51,600/- |

குத்தகைதாரரான திரு கே. ஹரி மற்றும் திரு வி.விஜய் மாதவன் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு மாதாந்திர உரிமக் கட்டணம் செலுத்தப்படாமல் உள்ளது.

| | |
|---|---|
| செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை- | |
| கடை எண். 1 (நவம்பா் 2010 முதல் ஏப்ரல் 2011 வரை) | |
| மாதம் ஒன்றிற்கு ரூ.6,000 x 6 | - ரூ. 36,000/- |
| மே 01.05.2011 முதல் 13.05.2011 வரை | |
| 13 நாட்கள் x 193.50 | - ரூ. 2,516/- |
| நவம்பா் 2010 முதல் மே 2011 வரை வட்டி | - ரூ. 5,520/- |
| | - ரூ. 44,036/- |
| கடை எண். 2 (நவம்பா் 2010 முதல் ஏப்ரல் 2011 வரை) | |
| மாதம் ஒன்றிற்கு ரூ.4,300 x 6 | - ரூ. 25,800/- |
| மே 01.05.2011 முதல் 13.05.2011 வரை | |
| 13 நாட்கள் x 139 | - ரூ. 1,807/- |
| நவம்பா் 2010 முதல் மே 2011 வரை வட்டி | - ரூ. 3,937/- |
| | - ரூ.31,544/- |

உரிமக் கட்டண நிலுவை செலுத்தக் கோரி இவ்வலுவலக அறிவிப்புகள் வாயிலாகவும், நேரிலும் பலமுறை நினைவூட்டப்பட்டும் நாளது தேதி வரை நிலுவை ஏதும் செலுத்தப்படாமலும் கடைகள் பயன்படுத்தப்படாமலும் பூட்டப்பட்டு இருந்தது.

எனவே, குத்தகைதாரரான திரு கே. ஹரி மற்றும் திரு வி.விஜய் மாதவன் என்பவர்களுக்கு மாமன்ற தீர்மான எண். 10 நாள் 28.04.2008-ன் மூலம் 01.04.2008 முதல் 31.03.2011 வரையிலான மூன்றாண்டுகளுக்கு உரிம உத்திரவினை ரத்து செய்யவும் குத்தகைதாரரால் செலுத்தப்பட வேண்டிய உரிமக் கட்டணம் நிலுவைக்கு அவர் செலுத்திய முன்பணத் தொகையிலிருந்து சரி செய்யவும் மீதமுள்ள நிலுவைக்கு சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொண்டு வசூல் செய்யவும், கடை எண். 1 மற்றும் 2-ல் வைப்புத் தொகை, ஓராண்டுக்கான உரிமக் கட்டணம் முன்வைப்புத் தொகை திருப்பி வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும், மேற்படி கடைகளை பொது ஏலம் / மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்யவும் அதற்கான செய்தித்தாள் விளம்பர கட்டண செலவினங்களை ஏற்றுக் கொள்ளவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண். 4 நாள் 31.05.2001 மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் மீது மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். எண்.03886/ 2011/ கிஅ11

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 13 நாள் 13.06.2011</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 4 நாள் 31.05.2011 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 14

பொருள் : கோயமுத்தூர் மாநகராட்சி - கிழக்கு மண்டலம் - குத்தகை இனங்கள் சிங்காநல்லூர் பேருந்து நிலையம் - கட்டண கழிப்பிடம் - ஏலம் மற்றும் பொது ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி கோருவது – தொடர்பாக

------

கோயமுத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், குத்தகை இனங்கள் வார்டு எண்.11-ல் அமைந்துள்ள சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் கட்டண கழிப்பிடம் அமைக்கப்பட்டுள்ளது. மாமன்ற தீர்மான எண்.302 நாள் 31.03.2010-ன்படி, மேற்படி கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை திரு வி.கே.ரஹமத்துல்லா என்பவருக்கு ரூ.7,75,777/- ஏலத் தொகைக்கு வழங்கப்பட்டது.

மேற்படி கட்டண கழிப்பிடத்தில் நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக (ரூ.1/-க்கு பதிலாக ரூ.3/- மற்றும் ரூ.5/-) வசூலிப்பதாக பல முறை பொது மக்களிடமிருந்து தொலைபேசி வழியாக புகார்கள் பெறப்பட்டதன் அடிப்படையில் ஆணையாளர் அவர்களின் முதல் முறையாக 12.05.2010-ம் தேதியில் ரூ.10,000/- அபராதம் விதித்து தொகை வசூல் செய்யப்பட்டது. மீண்டும் இரண்டாவது முறையாக 21.07.2010-ம் தேதி ரூ.20,000/- அபராதம் விதிக்கப்பட்டு தொகை வசூல் செய்யப்பட்டது. (இரசீது எண்.8672 நாள் 02.10.2010 ரூ.20,000/-)

தினமலர் நாளிதழில் 04.03.2011-ம் தேதியில் சிங்காநல்லூர் பேருந்து நிலைய கட்டண கழிப்பிடத்தில் ரூ.5/- அதிகமாக வசூல் செய்யப்படுகிறது என செய்தி வந்துள்ளதை தொடர்ந்து ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு அன்னாரது உரிமையினை உடனடியாக ஆணையாளர் அவர்களின் உத்திரவின்படி, 04.03.2011-ம் தேதியில் ரத்து செய்தும் செலுத்திய தொகையினை மாநகராட்சி கணக்கில் பறிமுதல் செய்தும் மாநகராட்சி துறை மூலமாக 10.03.2011-ம் தேதி முதல் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

எனவே, மேற்கண்ட சிங்காநல்லூர் பேருந்து நிலையம் கட்டண கழிப்பிடத்தை பொது ஏலம் / மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்யவும் அதற்கான செய்தித்தாள் விளம்பர கட்டண செலவினங்களை ஏற்றுக் கொள்ளவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண். 3 நாள் 31.05.2001 மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் மீது மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.15525/ 2009/ கிஅ11

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 14 நாள் 13.06.2011</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 3 நாள் 31.05.2011 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 15

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 16.05.2011 அன்று பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை %. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி சதவீதம் | விலைக் குறைப்புக்கு பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9140/2010/ எம்டி3 | வார்டு எண் 8 கிருஷ்ணா கார்டன் பகுதியில் மழை நீர் வடிகால் கட்டுதல் | 26.18 | 17.03.2011 _ன்றாம் அழைப்பு | தி/ள்எம்.எஸ் இ"சினியர்ஸ் | 4.97 % அதிகம் | - |
| 2 | 588/2011/ எம்டி2 | வார்டு எண்.70-க்கு உட்பட்ட கணபதி டீச்சர்ஸ் காலனி பகுதியில் பொது ஒதுக்கீடு இடத்தில் இரவு தங்கும் விடுதி (Night Shelter) கட்டிடத்திற்கு அபிவிருத்தி பணிகள் செய்தல் | 6.40 | 17.02.2011 முதல் அழைப்பு | தி/ள் செந்தில் அண் கோ | 5.02 % அதிகம் | 4.99 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு வரிசை எண்.1 மற்றும் உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்

ந.க.எண் 9140 /2010 /எம்.டி.3

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 15 நாள் 13.06.2011</u>

பொருளில் வரிசை எண். 1 அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

பொருளில் வரிசை எண். 2, இரவு தங்கும் விடுதியினை குடியிருப்பில்லாத வேறு பகுதிக்கு மாற்றம் செய்ய தீர்மானிக்கப்பட்டது. வரிசை எண். 2 பணியினை ரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 16

பொருள்: பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – திருமதி. எம்.கே. ஜெயஸ்ரீ, துணை இயக்குநர், அயற்பணி, உதவி ஆணையாளர் (கணக்குகள்) – மேலும் ஒரு ஆண்டிற்கு பதவி நீடிப்பு வழங்கக் கோருதல் – தொடர்பாக.

******

கோயம்புத்தூர் மாநகராட்சியில் உதவி ஆணையர் (கணக்கு) அலுவலராக பணியாற்றிய திரு. கோமதி விநாயகம் தான் நிர்வகிக்கும் பதவியின் முக்கியத்துவத்தை உணராமல் விரும்பத்தகாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதால், அன்னார் **27.05.2010** அன்று லஞ்ச ஒழிப்புத்துறையினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது பிடிபட்டதால் கோயம்புத்தூர் மாநகராட்சி அயற்பணியில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

உதவி ஆணையர் (கணக்குகள்) பணியிடத்திற்கு இப்பதவிக்கு திறமையான மற்றும் நேர்மையான ஒருவரை நியமனம் செய்ய கோரி சென்னை உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரிடம் கேட்டுக் கொண்டதின் அடிப்படையில் சென்னை உள்ளாட்சி நிதித் தணிக்கை (பணியாளர் மற்றும் நிர்வாகம்) இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.**I(3)67197/2010–1** நாள் **31.12.2010**ன் படி துணை இயக்குநர் **2010–2011–**ம் ஆண்டில் தேர்ந்தெடுப்போர் பெயர் பட்டியலில் இடம் பெற்றுள்ள திருமதி. எம். ஜெயஸ்ரீ இம்மாநகராட்சியில் உதவி ஆணையர் (கணக்குகள்) ஆக அயற்பணியில் நியமிக்கப்பட்டு **03.01.2011** பிற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணியாற்றி வருகிறார்.

மேலும், மேற்படியார் உள்ளாட்சி நிதித் தணிக்கை (பணியாளர் மற்றும் நிர்வாகம்) இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். **I(3)67197/2010–1** நாள் **28.02.2011**ன் படி துணை இயக்குநராக பதவி உயர்வும் வழங்கப்பட்டு **4.03.2011** முதல் இம்மாநகராட்சியில் தொடர்ந்து உதவி ஆணையாளர் (கணக்குகள்) ஆக பணியாற்றி வருகிறார். இவர் தற்போது கவனித்து வரும் உதவி ஆணையாளர் (கணக்குகள்) பணியுடன் உதவி (ஆணையாளர் நிர்வாகம்) பணியிடத்தையும் கூடுதலாக கவனித்து வருகிறார். மேலும் இவருக்கு குடிநீர் விநியோகப்பிரிவில் Cheque Drawing Power ம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட மூன்று பணியிடங்களிலும் இவரது பணி மிகவும் சிறப்பானதாக உள்ளது. தற்போது **2008–2009**ம் ஆண்டு கணக்குகள் தணிக்கைத் துறைக்கு அனுப்பப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. **2009–2010**ம் ஆண்டு கணக்குகள் தொகுக்கப்பட்டு தணிக்கைக்கு அனுப்பும் பணி சிறப்பாகவும் விரைவாகவும் நடைபெற்று வருகிறது. இவ்வாறாக பணிகள் நடைபெற்று முடிவுறும் நிலையில் இவர் **30.06.2011**ல் ஒய்வு பெறுவதினால் தற்போது தங்கு தடையில்லாமல் நடைபெற்று வரும் பணிகள் தொய்வடையும் என்பதாலும் இம்மாநகராட்சிக்கு திரு. எஸ். கோமதி விநாயகம் உதவி ஆணையர்(கணக்கு) அவர்களால் ஏற்பட்ட களங்கத்தை போக்கி நல்ல சீர் பெற்று வரும் நிலையில் இவரது பணி இம்மாநகராட்சிக்கு அவசியமானதாகும்.

எனவே மேற்படி திருமதி. எம். கே. ஜெயஸ்ரீ, உதவி ஆணையர் (கணக்குகள்) பணியினை மேலும் ஓர் ஆண்டிற்கு நீட்டிக்க ஆணை வழங்க கோரி அரசுக்கு பரிந்துரை செய்ய அனுமதி வேண்டி மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.13340/2011/எம்சி2

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 16 நாள் 13.06.2011</u>

கோவை மாநகராட்சியில் உதவி ஆணையர் (கணக்குகள்) ஆக பணிபுரிந்துவரும் உள்ளாட்சி நிதித் தணிக்கை துணை இயக்குனர் திருமதி. எம்.கே. ஜெயஸ்ரீ அவர்கள் 30.06.11 உடன் வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெற இருப்பதனால் மேலும் ஒரு ஆண்டிற்கு பதவி நீட்டிப்பு வழங்க அரசுக்குப் பரிந்துரை செய்ய ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

மிகவும் குறைந்த காலமே இம்மாநகராட்சியில் திருமதி. எம்.கே. ஜெயஸ்ரீ பணிபுரிந்துள்ளதாலும், மாநகராட்சி அலுவலர்களுக்கு இம்மாதிரியான பணிநீட்டிப்பு இதுவரை வழங்கப்படாத காரணத்தினால் இத்தீர்மானம் நிறைவேற்றக்கூடாது என எதிர்ப்பு தெரிவித்து 52-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. எம். நடராஜ் ஆட்சேபனை தெரிவித்தார். இவரது ஆட்சேபனை பதிவு செய்யப்பட்டது.

---

## பொருள் எண் 17

பொருள் - பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி – வகுப்பு III பிரிவு I வகை I ல் உள்ள கண்காணிப்பாளர் பதவியிலிருந்து வகுப்பு II வகை 4 ல் உள்ள கணக்கு அலுவலர் மற்றும் நிர்வாக அலுவலர் பதவிக்கு பதவி உயர்வு வழங்க தேர்ந்த பெயர் பட்டியல் (Panel) மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

-------------

தமிழ்நாடு மாநகராட்சிகள் 1996 ம் ஆண்டு பொது பணியமைப்பு விதிகள் வகுப்பு III பிரிவு I வகை I ல் உள்ள கண்காணிப்பாளர் பதவியிலிருந்து வகுப்பு II வகை III மற்றும் 4ல் உள்ள முறையே கணக்கு அலுவலர் மற்றும் நிர்வாக அலுவலர் பணியிடங்களுக்கு பதவி உயர்வு வழங்க ந.க.எண் 2802/2011 எம்சி 2 நாள் 17.05.2011 ல் வெளியிடப்பட்ட கண்காணிப்பாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் பணிமூப்பு பட்டியலிலிருந்து அரசாணை எண். 237, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 26.09.1996ன்படி தகுதி பெற்ற கீழ்குறிப்பிட்ட கண்காணிப்பாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலரின் தேர்ந்த பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் | கண்காணிப்பாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலராக பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 1 | திரு. செந்தில்குமார் ரத்தினம் (உ.வ.அ) | 26.05.2009 |
| 2 | திருமதி. தே. லட்சுமி பிரபா (க.கா) | 26.05.2009 |
| 3 | திரு வி. சரவணன் (உ.வ.அ) | 26.05.2009 |
| 4 | திரு கே. ரவிக்குமார் (க.கா) | 26.05.2009 |

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 2802/2011/ எம்.சி. 2

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 17 நாள் 13.06.2011</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. கண்காணிப்பாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் பணிமூப்பு பட்டியலில் 5-வது இடத்தில் உள்ள திருமதி ய. உஷாராணி அவர்களை தேர்ந்த பெயர் பட்டியலில் 5-வது நபராக சேர்த்து ஒப்புதல் வழங்க தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 18

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – அகில இந்திய மேயர்கள் மன்றம் - ஆண்டு சந்தா செலுத்துவது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக.

பார்வை - செயலாளர், அகில இந்திய மேயர்கள் மன்றம், புது டெல்லி அவர்களின் கடிதம் எண் 4599/AICM நாள் 01.04.2011

--------------

கோயம்புத்தூர் மாநகர மன்றத்தின் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள், அகில இந்திய மேயர்கள் மன்றம், புது டெல்லியில் அங்கத்தினராக இருந்து வருகிறார். இதற்கு 2011-12 ம் நிதியாண்டிற்கான ஆண்டு சந்தாவாக மொத்தம் ரூ. 20,000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) செலுத்துமாறு பார்வையில் காணும் செயலாளர், அகில இந்திய மேயர்கள் மன்றம், புது டெல்லி அவர்களின் கடிதத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, இம்மாநகர மன்றத்தின் சார்பாக 2011-12 ம் நிதியாண்டிற்கான ஆண்டு சந்தாவாக ரூ. 20,000/- ஐ (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) தலைவர், அகில இந்திய மேயர்கள் மன்றம், புது டெல்லி என்ற பெயரில் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 3180/11/எம்.சி. 8

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 18 நாள் 13.06.2011</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 19

கோயம்புத்தூர் மாநகரில் அனுமதியின்றி, அனுமதிக்கு மாறாக கட்டப்படும் கட்டிடங்களை கட்டுப்படுத்தும் பொருட்டு விதிமுறைகளை சிறப்பாக நடைமுறைப்படுத்தவும், சட்டத்திற்கு புறம்பான கட்டிடங்களை கட்டுப்படுத்தும் பொருட்டும் கட்டிடம் கட்டி முடித்தவுடன் கட்டிட முடிவு அறிக்கை மற்றும் கட்டிடத்தை பயன்படுத்துவதற்கான அறிக்கை நடைமுறையை செயல்படுத்த ந.க.எண் 4207/2011/MH5 நாள் 10.05.2011 அன்று ஆணையாளரால் உத்திரவிடப்பட்டது. அதன்படி கட்டிமுடிக்கப்பட்ட கட்டிடத்திற்கு வரைபடத்தின்படி கட்டிடம் கட்டப்பட்டள்ளது என கட்டிட உரிமையாளரிடமிருந்து /பொறியாளரிடமிருந்து கட்டிட முடிவு அறிக்கை பெற்று, அதனடிப்படையில் மாநகராட்சியால் வழங்கப்படும் கட்டிட பயன்பாட்டு சான்று பெறவேண்டும். அச்சான்றினை பெற்ற பின்னரே சொத்துவரி விதிக்கவும், குடிநீர், பாதாள சாக்கடை இணைப்பு மற்றும் மின் இணைப்பு பெறவும் இயலும்.

அதன் செயலாளக்கத்தில் சில நடைமுறை சிக்கல்கள் இருப்பதாலும், 13.06.2011 அன்று நடைபெற்ற சாதாரண மாமன்ற கூட்டத்தில் இதனை ரத்து செய்து ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்ற அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் கோரினர். இப்பொருள் மீது மாமன்றம் முடிவு செய்யலாம்.

**ந.க.எண். 4207/2011/MH5**

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 19 நாள் 13.06.2011</u>

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆணையரின் செயல்முறை ஆணைகள் ந.க.எண் 4207/2011/MH5 நாள் 10.05.2011ஐ தற்காலிகமாக நிறுத்திவைக்க ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

---

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**